**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**நாள். 21.03.2025**

**O.S. 87/2016**

**பி.வா.சா.1 - மனோன்மணி**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

வழக்கு பட்டிகை சொத்தின் பழைய சர்வே எண் என்ன என்றால் 836 பி. வழக்கு பட்டிகை சொத்தின் புதிய சர்வே எண் என்ன என்றால் நியாபகம் இல்லை. வழக்கு பட்டிகை சொத்தின்மொத்த அளவு என்ன என்றால் 1 ஏக்கர் 43 செண்ட். மேற்படி சொத்தை யார்யாருக்கு விற்றேன் என்றால் சுடலைமாட சுவாமி கோவிலுக்கு 5 செண்ட் தானமாக கொடுத்தேன், பஞ்சரெத்தினம் என்பவருக்கு 15 செண்ட் கொடுத்ததாக சொல்வார்கள் சரியாக தெரியவில்லை வேறு இரண்டு, மூன்று பேருக்கு சொத்து விற்கப்பட்டுள்ளது அதன் அளவுகள் எனக்கு நியாபகம் இல்லை. வழக்கு சொத்தின் எல்கை என்ன என்றால் கிழக்கு அம்மன் கோவில் மேற்கு சுடலைமாட சுவாமி கோவில் பஞ்சரெத்தினம் வீடு தெற்கு எங்கள் பூமிக்கான 3 அடி பாதை வடக்கு பஞ்சரெத்தினம் வீட்டிற்கு தெற்கு பக்கமாக எங்கள் வீட்டுக்கு செல்லக்கூடிய 3 அடி பாதை. மொத்த சொத்தான 1 ஏக்கர் 43 செண்ட் எவ்வாறு எனக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது கணவரின் சொத்து. ஆவணம் எந்த ஆண்டு பதிவு செய்யப்பட்டது என்றால் வருடம் நியாபகம் இல்லை. மொத்த சொத்தான 1 ஏக்கர் 43 செண்ட் அனைத்தையும் விற்று விட்டதற்கு ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் தெற்மேற்கு பகுதியில் உள்ள 12.5 செண்ட் கிடப்புபடி 10.90 சென்று என எனக்கு எப்படி தெரியவந்தது என்றால் நான் விற்றது போக மீதி கிடந்த சொத்தை அளந்து தெரிந்து கொண்டேன். எந்த வருடம் அளந்தேன் என்றால் 2016 ல். யார்மூலமாக அளந்தேன்

என்றால் சர்வேயர் மூலமாக அளந்தேன். வா.சா.ஆ.10 எனது கணவர் 1ம் வாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் எனக்கு படிக்க சரியாக கண் தெரியவில்லை ஆனால் எனது கணவர் ஆவணம் எழுதிக்கொடுத்ததாக சொல்வார். வாதிக்கு எழுதிக்கொடுத்த சொத்தினுடைய எல்கை என்ன என்றால் எங்களுடைய பாதைக்கு வடக்கில் பஞ்சரெத்தினம் இடம் உள்ளது. மேற்படி ஆவணத்தில் ரோட்டிற்கு தெற்கில் 15 சென்ட் இருப்பதாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ல் சுடலைமாடசுவாமி கோவிலுக்கு தெற்கு பக்கம் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ல் எல்கைகள் சரியாக உள்ளது நான் வழக்கிற்காக பொய்யாக ஜோடித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**